# Dr. JAMES T. RUTNAM MEMORIAL LECTURE 1

**November, 1989**

**Evelyn Rutnam Institute for Inter - Cultural studies**
JAFFNA,
SRI LANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகரும் இலங்கைப் பௌத்தமும்

# Tiruvacakar and Sri Lankan Buddhism

பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை
தமிழ்த்துறைத் தலைவர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலாநிதி ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் நினைவுப் பேருரை 1

இவ்லின் இரத்தினம்
பல்லினப்பண்பாட்டியல் நிறுவனம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
நவம்பர், 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INTRODUCTION

Dr. James T. Rutnam, the founder of this Institute passed away on 4th November, 1988. At the Memorial meeting held in December 1988 we announced that a memorial lecture will be held here annually to mark the occasion on his death anniversary. It is our expectation that an eminent scholar will be invited to deliver each annual memorial lecture. On the decision of the Council of Management of this Institute Dr. A Velupillai, Professor and Head of the Department of Tamil, University of Jaffna, has been invited to deliver the first memorial lecture.

The relations between South India and Sri Lanka during the days of Manikkavacakar, who was one of the four principal exponents of Medieval Tamil Saivism, forms the main theme of this lecture which was delivered in Tamil. The controversy between Manikkavacakar and a Sinhalese Buddhist monk at Chidambaram is alluded to in the **Tiruvatavur atikal puranam.** There is a wide gap of approximately four centuries between the date of Manikkavacakar and that of the **pu anam.** As some of the Tamil **puranams** contain biographical and historical information intermingled with legends a satisfactory method has to be evolved for distinguishing fact from fiction. It is hoped that the present paper will stimulate scholarly interest in this matter.

Evelyn Rutnam Institute for
Inter-Cultural Studies
University Lane, Jaffna
Sri Lanka.

**S. Pathmanathan**
Director

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Abstract

## Tiruvacakar and Sri Lankan Buddhism

Prof. A. Veluppillai

Department of Tamil University of Jaffna, Sri Lanka.

The first James I Rutnam Memorial Lecture is being held at the Evelyn Rutnam Institute for Inter-cultural Studies. The Late Dr. James Rutnam founded the Evelyn Rutnam Institute to promote Inter cultural understanding. Today's memorial lecture dealing with a phase in the interaction of Saivism with Buddhism is therefore an appropriate subject to remember the late Dr. Rutnam.

Among the four preceptors of Tamil Saivism, Saint Manikkavacakar still remains an enigma. His date is still hotly debated though it is now reasonably certain that he lived in the ninth century A. D. The name Manikkavacakar was conferred on him some centuries later. Both literary texts as well as inscriptions refer to him as a resident or saint of either Tiruvatavur, his birth place, or Tirupperunturai, the place of his enlightenment. As monasteries in his name are referred to as Tiruvacakan matam in inscriptions, Manikkavacakar will be referred to as Tiruvacakar in this lecture.

Among the three different sources for Tiruvacakar's biography, Tiruvatavurar Puranam alone deals in detail with his disputation with a Sri Lanka Buddhist monk at Chidambaram, which enabled a Sri Lanka dumb princess to talk and to answer the arguments of the Buddhist monk from the Saiva point of view and to the conversion of the Sri Lanka king to Saivism.

The question arises why only four religious men were raised to the position of Saiva preceptors. A study of the political conditions of Tamilnatu during the Period of Pallava Ascendancy provides the answer. Appar concentrated on Saiva religious revival in the Pallava Kingdom. Saint Campantar concentrated his attention on conversion in the Pandya Kingdom. Saint Cuntarar made friends with a Kerala ruler and tried to promote the cause of Saivism in his Kingdom.

It is in this background that the raising of Tiruvacakar to religious preceptorship should be understood. The Tevaram trio were concerned with the Ancient Tamilakam. Some scholars

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in the latter half of the twentieth century have postulated Andhra, Karnataka or Kerala connections to Tiruvacakar. M. Balasubramaniya Mutaliyar was the first to put forward the view that Tiruvacakar belonged to Karnataka in that the latter mentions Kokali in reference to his guru and that this place has been located in an epigraph of 1158 A. D in a part of Bellary District of Karnataka. As a portion of Bellary District has now been annexed to Andhra it is now suggested that Kokali belongs to Andhra. The Madurai Tamil Cankam Dictionary assigns Tiruvacakar to Kerala on the basis of the usage of some words.

There is evidence for close political contacts between Sri Lanka and the Pandya kingdom in the middle part of the ninth century A D. Sri Mara Sri Vallabha invaded northern Sri Lanka during the reign of Sena I. Sena II retaliated by invading the Pandya Kingdom. But there is no evidence for the conversion of the Sri Lanka ruler

Tiruvacakar seems to have done something for the cause of Sri Lanka Saivism. He might have done something to enable the Sri Lanka Saivites to withstand the onslaughts of Sinhala Buddhism.

Even if it were conceded that Tiruvacakar didn't come to Sri Lanka, a study of the localities where he worked and where he composed his patikams shows that most of them were adjacent to the Sri Lankan coast. The Tamilnadu coast from Rameswaram to Point Calimere is closest to the northwest coast of Sri Lanka. Tiruvacakar who hailed from the Pandya Kingdom spent most of his ascetic life at Tirupperunturai and Uttarakocamankai Uttarakocamankai is very close of Rameswaram, but is situated in the mainland According to Thurstan, this was the head - quarters of Atiyaracar, the Paratava chieftains. Though Tirupperunturai is an inland shrine, it is only a few miles from the sea. This shrine is almost on the northern border of the Pandya Kingdom on the banks of Southern Vellaru It lies within the traditional border of Chettynad. The Chettys and the Paratavar lived on both sides of the sea and maintained close contacts Tiruvacakar might have worked with this end in view.

Outside the Pandya Kingdom, Tiruvacakar worked in Tiruvarur, Tonipuram, Chidambaram, Tiruvannamalai and Tiru-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

kkalukkunram. Of these five localities, the first three are found very close to the Coromandal coast. Tiruvarur is not far away from Nagapattinam. Tonipuram is one of the twelve names of Cirkali; it is sometimes claimed to be one of the twelve wards of Cirkali. Toniappar is one of the names for Lord Siva, the Chief deity of Cirkali. Tonipuram is located near the northern border of Coromandal coast. Tiruvarur is in the middle and Tirupperunturai is in the South. Tiruvacakar himself refers to Chidambaram as having the resources of the sea coast in his very first verse of Tirukkovaiyar. The Tamil people of Coromandal coast had close contacts with the Tamils of Sri Lanka.

Tiruvacakar spent the last phase of his life at Ponnampalam. Ponnampalam becomes a magic word among the Tamil Saivites. According to Tiruvatavurar Puranam, the Sri Lanka King was provoked by a Saiva pilgrim chanting Ponnampalam to go to Chidambaram along with the leading Buddhist priest to establish Buddhism there. It can be deduced that the work of Tiruvacakar in Tamilnadu was having an inpact in Sri Lanka.

It is quite possible that there was a confrontation between Tiruvacakar and a leading Buddhist monk. The Buddhists excelled in religious debates and disputations. The 'accappattu' composed by, Tiruvacakar shows that Tiruvacakar was averse to this methodology.

Tiruvacakar's aversion to religions like Buddhism has been well brought out in his decad on 'tiruttol nokkam'. Sankaracarya who lived before Tiruvacakar formulated his Monistic philosophy to challenge Buddhism. But Tiruvacakar was critical of this philosophy.

Twenty verses going under the title of 'tiruccalal' are said to preserve a portion of the famous disputation. These verses defend Pauranic Saivism. Buddhism gives pride of place to karuna and here Tiruvacakar argues that the same virtue belongs to Siva.

More than a century later, Sri Lanka becomes a province of the Cola Empire. Even though the Colas patronised Saivism lavishly, there were Tamil Buddhists too and Rajarajapperumpalli-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

otherwise called Velgam Vihara in Trincomalee District was a flourishing Tamil Buddhist institution in the eleventh century A.D.

There is some reason to believe that the worship of Tiruvacakar might have originated in Sri Lanka. A Tiruvacakar statue preserved in the Colombo Museum in dated in the eleventh century. The earliest epigraphical reference to the worship of Tiruvacakar in Tamil nadu is from the reign of Vira Rajendra. As this king is now identified with the Cola Lankesvara, it is quite possible that this worship originated in Sri Lanka and then spread to South India.

It is only in a very late work that the name of the Pandya king as Arimarttanan, 'the slayer of lion' occurs. This word seems to be a synonym for Sinhala.

In later Sri Lanka the Tamil Buddhist community has disappeared completely. Some of them might have become Tamil Saivites. If they became Sinhala Buddhists, they could have easily maintained Rajarajapperumpalli and other vihares. Could they have become Muslims? The Buddhists in Malaysia and Indonesia became Muslims. Even in Nagapattinam, a flourishing Muslim community is found where there was a flourishing Buddhist Community.

There are only two clear references to Sri Lanka in Tiruvacakam. One of them clearly states that Lord Siva blessed Mantotari, the queen of Ravana. The second reference is also interpreted to refer to the same incident.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகரும் இலங்கைப் பௌத்தமும்

சைவசமய குரவர் நால்வர் என்பது மரபு. நால்வருள்ளே கடைசியாகக் கூறப்படுபவர் மாணிக்கவாசக சுவாமிகள். இவர் சுவாமிகள் எனப்பட, ஏனைய மூவருள் ஒவ்வொருவரும் நாயனார் எனப்படுகின்றனர். சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டத் தொகையில் இடம்பெற்ற சைவப்பெரியார் மட்டுமே நாயன்மார் எனப்படுகின்றனர். மாணிக்கவாசகர் திருத்தொண்டத் தொகையில் இடம்பெறவில்லை. மாணிக்கவாசகர் காலம் எது என்ற வினா எழுகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே, தொல்காப்பியர் காலத்துக்கு அடுத்ததாக, மாணிக்கவாசகர் காலமே பெரிய கருத்து வேறுபாடுகளுக்கு இடமாக இருந்துள்ளது. தமிழ்நாட்டு அறிஞர்களும் மேனாட்டு அறிஞர்களும் ஈடுபட்ட கால ஆராய்ச்சியிலே, கி. பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. பத்தாம் நூற்றாண்டு வரை சுட்டும் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒன்பதாம் நூற்றாண்டே இவருடைய காலம் என்பது இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவருடைய இயற்பெயரும் தவறிவிட்டது. மாணிக்கவாசகர் என்ற பெயர் இவருக்கு ஞானகுருவாக வந்த சிவபெருமானால் வழங்கப்பட்டதாகத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் கூறியுள்ள போதும் இவரை மாணிக்கவாசகரென்று குறிப்பது பொதுவாகப் பிற்கால வழக்கு. இவரை இவர் அவதரித்த ஊர்ப்பெயரோடு சேர்த்து திருவாதவூரர், திருவாதவூரடிகள், திருவாதவூராளி, திருவாதவூர்நாயனார், திருவாதவூர்ப் பெருமாள், திருவாதவூர்த் தம்பிரானார் என்றும் இவர் ஞானம் பெற்ற இடப்பெயரோடு சேர்த்து திருப்பெருந்துறையாளுடையார், பெருந்துறைப் பிள்ளை என்றும் இலக்கியங்களும் சாசனங்களும் குறிப்பிடுகின்றன. திருவாசகத்தின் ஆசிரியர் என்ற முறையிலே திருவாசகன் என்ற பெயர் இவருக்கு வழங்கியது இவர் பெயரால் எடுக்கப்பட்ட மடங்களுக்குத் திருவாசகன் மடம் என்ற பெயர் சாசனங்களிலே காணப்படுவதிலிருந்து தெளிவாகிறது. இக்கட்டுரையிலே திருவாசகர் என்பது மாணிக்கவாசகரைக் குறிக்க வழங்கும்

மதுரையிலே நடந்த சிவபெருமானுடைய திருவிளையாடல்களைக் கோவைப்படுத்தி விரித்துக் கூறும் முதனூலாகிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் திருவாசகர் மதுரையினின்று முடிவாக நீங்கித் திருப்பெருந்துறைக்குப் போனது மட்டும் விரிவாகக் கூறி, எஞ்சிய வரலாற்றை மிகவும் சுருக்கமாகக் கூறியுள்ளது. பரஞ்சோதி முனிவருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிளையாடற் புராணம், மதுரையிலிருந்து நீங்கிய திருவாசகர் திருப்பதிகள் பலவும் வணங்கிக்கொண்டு சிதம்பரத்துக்குச் சென்று அங்கே பௌத்தரை வாதில் வென்று இறைவன் திருவடியடைந்தமையைக் கூறி முடித்தது. திருவாதவூரர் புராணம் ஒன்றே திருவாசகர் வரலாற்றின் இறுதிப்பகுதியைச் செம்மையாய்க் கோவைப்படுத்திக் கூறுகிறது. சிதம்பரத்திலே திருவாசகர் இலங்கைப் பௌத்த குருவோடு வாதஞ்செய்தது, இலங்கை மன்னனுடைய ஊமை மகளைப் பேச்சுவன்மையுள்ளவளாக்கி பௌத்த குருவின் வாதங்களுக்குச் சைவத்தின் சார்பான விடைகள் கூறுவித்தது, இலங்கை மன்னனைச் சைவனுக்கியது முதலியன கடவுள் மாமுனிவரின் திருவாதவூரர் புராணத்திலேயே விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

திருவாசகர் இலங்கைப் பௌத்தருட் சிலரைச் சைவராக்கியமை இலங்கையிலேயே நிகழ்ந்ததென்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. இராஜாத்நாகரி என்ற சிங்களவர் நூல் புத்தர் காலத்துக்கு 1360 ஆண்டுகட்குப் பின் சைவமுனிவர் ஒருவர் இலங்கைக்கு வந்து சிவநெறியைக் கற்பித்துப் பலரைச் சைவராக்கினுர் என்று கூறுகிறது. இந்த ஆண்டு கி.பி. 819 என்று நெல்சன் என்பார் கூற, கி.பி. 869 என்று எம்.சீனிவாசஐயங்கார் கூறியுள்ளார். இவர்கள் இருவரும் திருவாசகரே அந்தச் சைவமுனிவர் என்று கூறியுள்ளனர். இலங்கைக்குத் திருவாசகர் வந்தாரென்று தமிழ்மொழி மூலாதாரங்களுள் ஒன்றுமே கூருமையால் இருவர் கருத்துக்களையும் ஏற்கமுடியாதென ஔவை துரைசாமிப்பிள்ளை (சைவ இலக்கிய வரலாறு. 1958) கூறுவர். இலங்கைச் சைவத்துக்குத் திருவாசகர் சிதம்பரத்திலிருந்தே வெற்றி பெற்றுக் கொடுத்தாரா இலங்கைக்குப் போய்த்தான் வெற்றி பெற்றுக் கொடுத்தாரா என்பதை முடிவாகத் தீர்மானிக்க முடியவில்லை.

சைவப்பெரியார்களுள்ளே நால்வர் மட்டும் சமய குரவர் என்ற பெருமைக்கு உயர்த்தப்பட்டது ஏன் என்ற வினு எழுகிறது. பெருந்தொகையான பக்திப்பாடல்களைப் பாடியதுதான் காரணம் என்று கூறமுடியாது. சைவசித்தாந்தம் குறிப்பிடும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை மார்க்கங்களுக்கு உதாரண புருடர்களாக வாழ்ந்தமைதான் என்று கூறுவதும் பொருத்தமாகக் காணப்படவில்லை. சிவனடியார்கள் பிறரும் இந்த மார்க்கங்களையே பின்பற்றினர். எழுப்பப்பட்டுள்ள வினுவுக்கான விடை தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றிலே பல்லவர்காலம் (கி.பி. ஏழாம் நூற்றுண்டு தொடக்கத்திலிருந்து ஒன்பதாம் நூற்றுண்டு முடிவு வரை) நிலவிய அரசியற் சூழ்நிலையிலே தங்கியிருக்கிறது. அந்தக்காலத்துத் தமிழ் நாட்டிலே, பெரும்பகுதி பல்லவர் ஆட்சியிலும் சிறுபகுதி பாண்டிய ராட்சியிலும் எஞ்சிய பகுதி சேரராட்சியிலும் அடங்கியிருந்தது. 'மன்னன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்பது பொதுவான அக்கால நிலைமை. மன்னரைத் தம் வழிக்குக் கொண்டுவந்து மக்களிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்தை வளர்க்க முனைந்தோரே தேவார முதலிகள் மூவராவர். மன்னரை வழிக்குக் கொண்டு வருவது அவர்களைப் பிற சமயத்திலிருந்து மதம் மாற்றுவதாக, நாயன்மார் இருவர் வரலாற்றில் அமைகிறது. அப்பர் சமண சமயத்திலிருந்து முதலாவது மகேந்திரவர்மன் என்ற பல்லவ மன்னனையும், சம்பந்தர் சமண சமயத்திலிருந்து நின்ற சீர்நெடுமாறன் எனப்பட்ட பாண்டியன் அரிகேசரியையும் சைவத்துக்கு மாற்றினர். சேரநாட்டு மன்னர் சேரமான் பெருமாளை மதம் மாற்றவேண்டிய தேவை சுந்தரருக்கு இருக்கவில்லை. சேரமான் பெருமாளை நெருங்கிய நண்பராகக் கொண்ட சுந்தரர், பக்திப்பாடல் பாடும் நாயனாராக அவர் உயருவதற்கு உதவியிருப்பாரென்றே கொள்ளலாம்.

மேற்படி பின்னணியிலேயே, திருவாசகர் சமய குரவராவதற்குரிய தகுதியை விளங்கிக்கொள்ள வேண்டும். தேவார முதலிகள் மூவரும் செய்த பணி அக்காலத் தமிழகத்துக்குள்ளேயே அடக்கமாகிறது. சேரநாட்டுக்குக் கேரளம் என்ற பெயரும் சேரநாட்டு மக்களுக்கு மலையாளர் என்ற பெயரும் வழங்கியதற்கும் சான்றுகள் கிடைக்கின்ற போதிலும் தமிழும் மலையாளமும் வேறுவேறு மொழிகள் என்று கணிக்கப்படும் அளவுக்கு அக்கால நிலைமை இருக்கவில்லை. தமிழகத்தின் வட எல்லையிலே தெலுங்கு, கன்னடம் முதலிய தமிழின் இனமொழிகளே பேசப்பட்டுவந்தபோதிலும், அம்மொழிகள் வழங்கிய பிரதேசங்களிலே தங்களுடைய பணியை விரிவு படுத்த சமய குரவர்கள் முயலவில்லை. பண்டைத் தமிழகத்தின் மூன்று பெரும் பிரிவுகளிலும் முதல் மூன்று சமய குரவரும் பணியாற்றி விட்ட நிலையிலே, தமிழகத்துக்கு வெளியிலே பணியாற்றக்கூடிய சந்தர்ப்பம் திருவாசகருக்குக் கிடைத்தது. இருபதாம் நூற்றுண்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் சிலர் திருவாசகரைக் கருநாடகத்தோடும் ஆந்திரப்பிரதேசத்தோடும் கேரளத்தோடும் தொடர்புபடுத்தியுள்ளனர். திருவாசகர் தம்முடைய ஞானகுருவின் இருப்பிடமாகப் பல இடங்களிலே விதந்து குறிப்பிடும் கோகழி கருநாடகத்தைச் சேர்ந்த பெல்லாரி மாவட்டத்தைச் சேர்ந்த பகுதி என்ற கருத்து திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகச் செயலாளராகவும் தலைவராகவும் விளங்கிய ம. பாலசுப்பிரமணிய முதலியாரால் முதன் முதலிலே முன்வைக்கப்பட்டது. கன்னடமொழியிலுள்ள சாசனம் கி. பி. 1158 இல் வீரபாண்டியதேவன் கோகழி நாட்டை ஆண்டானெனக் கூறுவதே இக்கருத்துக்கான மூலாதாரமாகும். இலங்கைத் தமிழறிஞர் சு. நடேசபிள்ளையும் இக்கருத்தினை வலியுறுத்தியுள்ளார். பெல்லாரி மாவட்டத்தின் ஒரு பகுதி ஆந்திரப் பிரதேசத்தோடு இணைக்கப்பட்டுவிட்ட நிலையிலே, திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் (திருவாசக ஆராய்ச்சியுரை: நயவுரை. 1973) கோகழி ஆந்திரப்பிரதேசத்திலுள்ள தென்பது ஐயத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டதாகக் கூறியுள்ளார். கோகழி பற்றிய கருத்துவேறுபாடுகள் இன்னும் நீங்கவில்லை என்பதே எமது கருத்து. சில சொல்லாட்சிகளின் அடிப்படையிலே, திருவாசகர் மலையாள நாட்டைச் சேர்ந்தவரென்று மதுரைச் சங்கப் பேரகராதி கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டு நடுப்பகுதியிலே, இலங்கைக்கும் பாண்டியநாட்டிற்கும் நெருங்கிய அரசியல் தொடர்பு இருந்ததற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் என்ற பாண்டியன் முதலாம்சேனன் என்ற சிங்கள மன்னனுடைய ஆட்சிக்காலத்திலே வட இலங்கைமேற் படைநடத்தி நாட்டைக் கொள்ளையடித்துச் சென்றுன். சில ஆண்டுகளின் பின் இரண்டாவது சேனன் என்ற சிங்கள மன்னன் பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச் சென்று, பாண்டியனைக் கொன்று பழிவாங்கினுன். இலங்கை மன்னன் மதம்மாறிச் சைவனுனதற்குச் சமகாலச்சான்றுகள் கிடைக்கவில்லை. இலங்கை மன்னன் மதம் மாறியிருந்தால், சிங்கள மக்களிலும் ஒரு பகுதியினராவது மதம் மாறியிருப்பர், அத்தகைய ஒரு மதமாற்றம் சிங்களவரது கால ஏடான சூளவம்மிசத்திலும் ஏதோ ஒருவகையிலாவது இடம்பெற்றிருக்கும்.

ஆனுல் இலங்கையிலே சைவத்தைக் காப்பாற்றுவதற்குத் திருவாசகர் ஏதோ உருப்படியான பணியாற்றியிருக்கிறுர். பாடல்பெற்ற தலங்களான திருகோணமலை, திருக்கேதீசுவரம் என்பனவற்றை மையமாகக் கொண்டு இலங்கைத் தமிழரிடையே பேணப்பட்டுவந்த சைவத்துக்குத் தீவிர பௌத்தராகிய சிங்கள மன்னர்களால் ஏற்பட்டுவந்த நெருக்குதல்களை எதிர்த்து நிற்கத்தக்க ஊக்கத்தை திருவாசகர் கொடுத்திருக்கிறுர்போலத் தோன்றுகிறது.

திருவாசகர் இலங்கைக்கு வரவில்லை என்றுகொண்டாலும் அவர் தமிழ்நாட்டிலே ஆட்கொள்ளப்பட்டபின் பணியாற்றிய பகுதிகளையும் பதிகங்கள் பாடிய பகுதிகளையும் உற்றுநோக்கும்போது; அவற்றுள் மிகப் பெரும்பாலன இலங்கைக்கு அண்மையிலுள்ள கடற்கரையை ஒட்டியனவாகக் காணப்படுகின்றன. இலங்கைக்கு மிக அண்மையிலுள்ள தமிழ்நாட்டுக் கடற்கரை இராமேசுவரத்திலிருந்து கோடிக்கரை வரையிலாகும். பாண்டிய நாட்டவரான திருவாசகர் திருப்பெருந்துறையிலும் உத்தரகோசமங்கையிலும் தம்முடைய துறவு வாழ்க்கையிலே பெரும் பகுதியைக் கழித்துள்ளார். உத்தரகோசமங்கை இராமேசுவரத்துக்கு அண்மையில் உள்ளது. இது பரதவர் தலைவரான அதியரசர் குடியிருப்பாகச் சிலகாலம் விளங்கிய ஊர். திருப்பெருந்துறை கடற்கரையிலே அமையாவிட்டாலும் கடற்கரைக்கு அண்மையில் பாண்டியநாட்டின் வட எல்லையிலே, தென்வெள்ளாற்றங்கரைக்கு அண்மையில் அமைந்துள்ளது. செட்டிநாட்டின் எல்லைக்குள்ளே திருப்பெருந்துறை அடங்குகிறது. செட்டிமாரும் பரதவரும் இலங்கையிலும் வாழ்ந்ததாலும் தமிழ்நாட்டோடு தொடர்புகளைப் பேணிவந்ததாலும் பாண்டியநாட்டுக் கடற்கரையிலே திருவாசகர் ஏற்படுத்திய எழுச்சி இலங்கைத் தமிழர்களிடையே புத்துணர்ச்சியை ஏற்படுத்தியிருக்குமென்று நம்பலாம்.

பாண்டியநாட்டுக்கு வெளியே திருவாசகப் பதிகங்கள் பாடப்பட்ட தலங்கள் திருவாரூர், தோணிபுரம், சிதம்பரம், திருவண்ணமலை, திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுக்குன்றம் முதலியனவாம். இவற்றுள் முதல் மூன்றும் சோழமண்டலக் கடற்கரைக்கு அண்மையில் அமைந்துள்ளன. திருவாரூர் நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து தூரத்தில் இருப்பதாகக் கூறமுடியாது. தோணிபுரம் சீர்காழியின் பன்னிரு பெயர்களுள் ஒன்று; சீர்காழியின் பன்னிரு வட்டாரங்களுள் ஒன்று என்றும் சிலர் கூறுவர். தோணியப்பர் என்ற பெயரோடு சிவபிரான் வீற்றிருக்கும் சீர்காழிக்கு நெய்தல் தொடர்பான புராணக்கதையும் உண்டு. தஞ்சாவூர்மாவட்டக் கடற்கரையின் வட எல்லைக்குக்கிட்டத் தோணிபுரமும் தென்னெல்லைக்குக் கிட்டத் திருப்பெருந்துறையும் இடையிலே திருவாரூரும் உள்ளன. கொள்ளிடத்தின் வடபால் அமைந்துள்ள சிதம்பரமும் கடற்கரைக்கு அயலிலேயே உள்ளது. திருக்கோவையார் முதற்பாட்டிலே, சிதம்பரம் என்ற தில்லையிலே ஐந்து நிலவளங்களும் விரவியுள்ளதாகவே திருவாசகர் பாடியுள்ளார். சோழ நாட்டுக் கரையிலும் அதற்கு அயலிலும் வாழ்ந்த மக்களும் இலங்கைத் தமிழர்களோடு நெருங்கிய தொடர்புகொண்டு வாழ்ந்திருப்பரென்றே கருதலாம். திருவாசகரின் பணி அப்பிரதேசத்திலிருந்தும் இலங்கைத் தமிழர்களை எட்டியிருக்கும்.

திருவாசகர் தம்முடைய உலகவாழ்க்கையின் இறுதிப்பகுதியைச் சிதம்பரத்திலேயே கழித்தார். ஆடவல்லான் நடனமிடும் பொன்னம்பலம் அக்காலத் தமிழ்ச் சைவர்களின் மந்திரமாகியது. இலங்கையிலே யாத்திரைசெய்த சிவனடியார் ஒருவர் இந்த மந்திரத்தைப் பலமுறை உச்சரித்துக்கொண்டுபோனதைக் கண்டவர்களே இலங்கை மன்னனுக்கு அறிவிக்க, அவன் பொன்னம்பலத்தின் பெருமையை விசாரித்து அறிந்து, பொன்னம்பலத்திலே புத்தபிரானை வீற்றிருக்கச் செய்யவேண்டுமென்ற நோக்கிலே தலைமைப் பௌத்த குருவையும் அழைத்துக்கொண்டு சிதம்பரத்துக்கு வந்தானெனத் திருவாதவூரர் புராணம் கூறும். இக்கூற்றின் படி திருவாசகர் தமிழ்நாட்டிலே செய்த பணி இலங்கையிலே பயன் கொடுக்கத் தொடங்கியிருந்ததென்பது தெளிவு.

மன்னன் மட்டத்தில் இல்லாவிட்டாலும், ஏதோ உயர் மட்டத்திலே திருவாசகருக்கு இலங்கைப் பௌத்தகுருவோடு மோதல் ஏற்பட்டிருக்கிறதென்று கொள்ளலாம். மதவாதிகள் பட்டிமன்றத்திலே கூடித்தம் சமயமே உண்மையானது என்று வாதித்துச் சமயத்தை நிலைநாட்டுவதுபற்றிப் பௌத்தநூலாகிய மணிமேகலை கூறியுள்ளது. பௌத்த சமயத்தவர் தம்முடைய சமயத்தைப் பரப்பக் கையாண்ட வழிகளுள் முக்கியமானது அதுவே. திருவாசகர் திருவாசக அகச்சான்றுகளைக் கொண்டு பார்க்கும்போது, இந்த வழியை விரும்பியிருப்பாரென்று கூறமுடியாதுள்ளது. சைவசமயத்தை ஏற்காதவர்களையும் சிவபிரானுக்கு முதன்மை வழங்காதவர்களையும், சிவபிரானில் அன்பு இல்லாதவர்களையும் சிவசின்னமாகிய வெண்ணீறு அணியாதவர்களையும் திருவாசகர் காணவே சகிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டார். அவர் தில்லையிலே பாடிய 'அச்சப்பத்து' என்ற பதிகம் அவருடைய இந்த மனநிலையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

சிதம்பரத்திலேயே அவர் பாடிய 'திருத்தோள் நோக்கம்' என்ற பதிகத்திலுள்ள ஆறாவது பாடலிலே பௌத்தம் முதலிய புறச்சமயங்களிலே அவருக்குள்ள வெறுப்பைப் புலப்படுத்துமாறு:-

'புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்க'

பகுத்தறிவுக்கும் வாதவன்மைக்கும் கூடிய இடம்கொடுத்த பௌத்தத்தை வெல்ல வேண்டுமானால், பௌத்தம் போதித்த கோட்பாடுகளிலே சிலவற்றை ஏற்று அவற்றைத் தம்முடைய கோட்பாட்டுக்கு ஏற்ப மாற்றினால் மட்டுமே சாத்தியமாகும். திருவாசகருக்குச் சிறிதுகாலம் முன்பு வாழ்ந்த ஆதிசங்கரர் தம்முடைய தத்துவமுறையாகிய ஏகான்மவாதம் அல்லது அத்துவிதத்தை அவ்வாறே கட்டியெழுப்பினார். உலகம் மாயை என்ற பௌத்தரது வாதத்தை ஆதிசங்கரர் ஏற்றுள்ளமையினால் அவருடைய தத்துவமுறை மறைந்துள்ள பௌத்தம் என்ற பொருளிலே 'பிரஸ்ஸன பௌத்தம்' எனவும் மாயாவாதம் எனவும் கூறப்படுவதுண்டு. திருவாசகர் போற்றித் திருவகவல் என்னும் பதிகத்திலே 'மிண்டிய மாயாவாதமென்னும் சண்டமாருதம் சுழித்தடித் தார்த்து' என்று கூறியுள்ளமையினால், ஆதிசங்கரர் பௌத்தரை வெல்வதற்குக் கையாண்ட வழி திருவாசகருக்கு உடன்பாடில்லையென்பது தெளிவு.

திருவாசகருக்கும் இலங்கைப் பௌத்த பிக்குவுக்கும் நடைபெற்ற விவாதம் குறித்துவைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பௌத்த பிக்கு சைவம்பற்றிய எழுப்பிய வினாக்களுக்குத் திருவாசகர் விடைகள் சொல்லி அடங்காத நிலையிலே, ஊமையாக இருந்த இலங்கை அரசனுடைய குமாரிக்குப் பேசும் ஆற்றல் கொடுத்து, அவளைக்கொண்டு விடைகள் சொல்லுவித்தாரெனக் கூறப்படுகிறது. அவ்வினாவிடைகளுள்ளே சிவபிரானைப்பற்றிய வினாவிடைகளையே திருவாசகர் தொகுத்துத் 'திருச்சாழல்' என்ற பதிகம் பாடினாரெனப்படுகிறது. இருபது செய்யுள்களால் இப்பதிகம் அமைந்துள்ளது. சிவபிரானுடைய திருக்கோலக் காட்சியையும் திருவருட் செயல்களையும் விளக்கும் வடமொழிப் புராண இதிகாசக் கதைகளையும் கருத்துக்களையும் மிக அழகாகக் கையாண்டுள்ளனர். சிவனுடைய வரம்பிலாற்றலை விளக்கும் புராணக் கதைக்குறிப்புகள் பொதுவாகத் தேவாரங்களிலும் சிறப்பாகச் சுந்தரர் தேவாரத்திலும் திருவருட் செயல்களாக மாற்றம் பெறுகின்றன. திருச்சாழலிலே சிவனுடைய திருக்கோலக்காட்சி பற்றியும் திருவருட்செயல்கள் பற்றியும் வினாக்கள் எழுதப்பட்டு, இறுக்கப்பட்ட விடைகள் யாவும் சிவனுடைய திருவருளை மையமாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. கருணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது காருணியத்துக்குப் பௌத்தம் முதலிடம் வழங்குகிறது. புத்தரைக் கருணைக்கடலாகச் சித்திரிக்கும் பௌத்தம், புத்தர் தம்முடைய பழைய பிறவிகளிலே, போதிசத்துவராக இருந்தபோதும் அதற்குமுன்பும் காருணிய உணர்ச்சி பெருகிவரப் பெற்றாரென்பதை உணர்த்துவதற்காகப் பௌத்த சாதகக்கதைகளைப் பயன்படுத்திவந்தது. திருச்சாழலின் உட்பிடை 'சிவனதுகாருணியம்' எனப்படுகிறது புத்தருடைய காருணியத்தை உயர்த்திச் சொல்லி, சிவனை மட்டந்தட்ட முனைந்த பௌத்த பிக்குவுக்கு, சிவனுடைய காருணியத்தை உயர்த்திச் சொல்வதாக, திருவாசகரது வாதம் அமைந்திருக்கிறது.

மூவர் தேவாரங்களையும் திருவாசகத்தையும் ஒப்பிடும்போது ஓர் உண்மை விளங்கித் தோன்றுகிறது. தேவாரங்களிலே பயின்று வழங்கும் புராண இதிகாசக் கதைக்குறிப்புகளைத் திருவாசகர் அருமையாகவே பயன்படுத்தியுள்ளார். மூவர் பரவலாகப் பயன்படுத்திய சிவ பராக்கிரமம் பற்றிய புராண இதிகாசக் கதைகளுள்ளே, சிவபெருமான் திரிபுரம் எரித்தது. தக்கனுடைய வேள்வியைத் தகர்த்தது, திருமாலும் பிரமனும் அடிமுடிதேடியது ஆகிய மூன்று மட்டுமே திருவாசகரின் உள்ளத்தை மிகவும் கவர்ந்தனவாகும். உதாரணமாக, திருவுந்தியாரிலே, முதல் நான்கு பாடல்களிலே திரிபுரசங்காரமும் அடுத்த பன்னிரண்டு பாடல்களில் தக்கயாகசங்காரமும் சொல்லப்பட்டுள்ளன. அடிமுடிதேடிய கதை பல திருவாசகப் பதிகங்களிலும் ஆங்காங்கே காணப்படுகிறது. கீர்த்தித் திருவகவல் முதலிய பதிகங்களிலே திருவாசகர் பல புதிய சிறப்புக் கதைகளைக் குறிப்பிட்டுள்ளார்.

திருச்சாழலைப் பார்க்கும்போதுதான் பௌராணிகச் சைவம் பற்றித் திருவாசகர் நன்கு அறிந்திருந்தமை புலனாகிறது. உதாரணமாக இரண்டு செய்யுள்களைப் பார்க்கலாம்:-

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடி
தாயுமிலி தந்தையிலி தான் தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ. (3)

சிவன் எவ்வித ஆதரவுமற்ற ஏழைபோல உள்ளானே என்றால், அவன் கோபித்தால் உலகமே அழிந்துவிடுமென விடைகூறப்படுகிறது.

மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையில் பாயுமது என்னேடி
சலமுகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலளேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையை மனைவியாகக்கொண்ட சிவன் தலையிலே கங்கையாளைத் தாங்கி இருப்பது ஏனென்றால், அவ்வாறு தாங்காவிட்டால் உலகத்துக்குப் பேரழிவு ஏற்பட்டிருக்கும் என்பது விடை.

திருவாசகர் காலத்துக்குப்பின் ஏறத்தாழ ஒன்றேகால் நூற்றாண்டுக்குப்பின்பே இலங்கையிலே சோழப் பேரரசின் ஆட்சி தொடங்குகிறது. சோழர் சைவசமயத்துக்குப் பேராதரவு வழங்கினர். திருஞானசம்பந்தரின் உயர் பாராட்டுப் பெற்ற பாடல்பெற்ற தலமான திருகோணமலை சோழர் காலத்திலே பெருங்கற் கோவிலாகக் கட்டியெழுப்பப்பட்டது. குளக்கோட்டனே அவ்வாறு கட்டியெழுப்பினானென்று கோணேசர் கல்வெட்டு, தட்சிணகைலாயபுராணம் முதலியன குறிப்பிடும். சோழலங்கேஸ்வரன் என்ற விருதோடு கால் நூற்றாண்டுக்கு மேலாக இலங்கையில் ஆட்சிபுரிந்த சோழ இராசப் பிரதிநிதியே குளக்கோட்டனாக வேண்டும் என்ற கருத்து அண்மையில் முன்வைக்கப்பட்டுள்ளது. சோழப் பேரரசர் சைவசமயத்துக்குப் பேராதரவு வழங்கியபோதும் சமயப்பொறுமையைக் கடைப்பிடித்துப் பிறசமயங்களுக்கும் ஆதரவு நல்கினர். தமிழ்ப்பௌத்தர்கள் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய நிலைமை சோழர்காலத்திலே நிலவியது. இலங்கையிலே திருவாசகர் காலத்தின் பின்னும் சிங்களபௌத்த மன்னர் ஆட்சி தொடர்ந்ததால், தமிழர்களுள் ஒருசாரார் பௌத்தர்களாக விளங்கினர். திருகோணமலைப் பிரதேசத்திலுள்ள வெல்கம் விகாரம் இலங்கைத் தமிழ்ப் பௌத்தர்களுடைய தலைமைப்பீடமாக விளங்கியிருக்கிறது. முதலாம் இராசராசச் சோழனுடைய பெயரிலே வெல்கம் விகாரம் இராசராசப் பெரும்பள்ளியெனப் புதுப்பெயர் பெற்றது. தமிழர் பலர் இராசராசப் பெரும்பள்ளியை ஆதரித்துவந்தமையைத் தமிழ்ச்சாசனங்கள் எடுத்துக்கூறுகின்றன.

இலங்கைத் தமிழ்ச் சைவர்களும் திருவாசகர் செய்த பெரும் பணியை மறக்கவில்லை. திருவாசகர் வழிபாடு இலங்கையிலேயே தோன்றியிருக்கலாம் என்று கருதுவதற்கு இடமிருக்கிறது. திருவாசகரின் மிகப் பழைய செப்பு உருவம் - கி. பி. பதின்மூராம் நூற்றாண்டுக்குரியது கொழும்பு நூதனசாலையிலே பேணப்பட்டு வருகிறது. ஓலைச்சுவடியை ஏந்திய கையராய் உள்ள திருவாசகர் 'நமசிவாய' என்பதைச் சுவடியின் வெளிப்பக்கத்திலே பொறிக்கப்பட்டிருக்கக் காணப்படுகிறார். திருவாசகத்தின் முதற் பதிகமாகிய சிவபுராணத்தின் தொடக்கமாக இப்பஞ்சாட்சர மந்திரம் காணப்படுவதால், ஓலைச்சுவடி திருவாசகமென்றே கொள்ளத்தக்கது. வீரராசேந்திரசோழன் (கி. பி. 1063 - 1070) காலத்திலிருந்தே திருவெம்பாவை முதலாம் திருவாசகப் பதிகங்களை ஓதுவதற்கும் திருவாசகர் உருவச்சிலையை வைத்து வணங்குவதற்கும் தமிழ்நாட்டிலே முயற்சிகள் தொடங்குகின்றன. இலங்கையிலே சோழலங்கேஸ்வரனாக இருந்தவனே பின்னர் வீரராசேந்திர சோழனானமையை நோக்கும்போது இலங்கையில் நிலவிய திருவாசகர் வழிபாடு பின்னரே தமிழ்நாட்டிலே பரவியிருக்கலாம் போலத் தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகர் காலத்துப் பாண்டிய மன்னன் பெயர் எதுவென முன் தோன்றிய நூல்கள் கூறுதொழியப் பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணமே அரிமர்த்தன பாண்டியனெனப் பெயர் கூறுகிறது. பரஞ்சோதி யாருக்குப் பழைய மூலாதாரம் எதுவும் கிடைத்ததாகத் தெரியவில்லை. சிங்களவர் என்பதற்குச் 'சிங்கத்தைக் கொன்றவர்' என்றும் பொருளுண்டு. அரிமர்த்தனன் என்பதும் அதே பொருள்படலாம். பாண்டிய மன்னர் சாசனங்களிலோ, பிறவரலாற்று மூலாதாரங்களிலோ அரிமர்த்தனன் என்ற பெயர் காணப்படவில்லை. திருவாசகருடைய இலங்கைத் தொடர்பு நோக்கி, பரஞ்சோதியார் இப்பெயரைப் படைத்துக் கூறியிருக்கிறார் என்றே கொள்ளலாம்.

சோழப் பெருமன்னர் காலத்திலும் சுயேச்சையாக இயங்கிய இலங்கைத் தமிழ்ப் பௌத்தர்களுக்கு நேர்ந்த கதியென்ன என்பது ஆராய்ச்சிக்குரியது. அவர்கள் மொழியை மாற்றிவிட்டார்களா, மதத்தை மாற்றி விட்டார்களா என்ற வினா எழுகிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டு இறுதியிலே நிஸ்ஸங்கமல்லன் ஆட்சிவரையிலே வெல்கம் விகாரம் எனப்பட்ட இராசராசப் பெரும்பள்ளி செல்வாக்குடன் விளங்கியது. அதன் பின்பு இலங்கைத் தமிழ்ப் பௌத்தர்களைத் திருகோணமலையிலே காணவில்லை. ஊகத்தாலேயே விடைகாண வேண்டும். தமிழ்ப்பௌத்தர் மொழியை மாற்றிச் சிங்கள பௌத்தராக ஆகியிருந்தால், இராசராசப் பெரும்பள்ளி முதலியவற்றைக் காடு அடர்ந்து போகுமாறு கைவிட்டிருக்கமாட்டார்கள். சிலர் மதத்தை மாற்றித் தமிழ் இந்துக்களாக ஆகியிருக்கலாம். ஒருசாரார் இசுலாமைத் தழுவியிருப்பார்களா என்பதும் ஆராயத்தக்கது. சோழர்களுடைய துறைமுகமான நாகப்பட்டினத்திலே நீண்டகாலமாக வாழ்ந்து வந்த தமிழ்ப் பௌத்த சமுகம் இன்று இல்லை. இன்று அங்கே செல்வாக்குடன் வாழும் இசுலாமிய சமுகம் பௌத்த சமுகம் மதம் மாறியதால் தோன்றியதென்ற கருத்து உண்டு. மலேசியா இந்தோனேசியா முதலிய தென்கீழ் ஆசியப் பௌத்த நாடுகள் ஏழு எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே இசுலாமிய நாடுகளாக மாறின. வேறுபல நாடுகளிலும் இத்தகைய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இலங்கையிலும் இத்தகைய மத மாற்றம் ஏற்பட்டிருக்கக்கூடும்.

வீரராசேந்திர சோழனைப் புகழ்ந்து, வீரசோழியம் என்னும் இலக்கண நூலை இயற்றிய பொன்பற்றியூர்ச் சிற்றரசரான புத்தமித்திரனார் இலங்கைத் தமிழ்ப் பௌத்தராக இருக்கக்கூடுமோ என்ற வினா எழலாம். வீரராசேந்திரன் சோழலங்கேஸ்வரனாக இருந்தவனாதலால் அவனோடு இலங்கைத் தமிழ்ப் பௌத்தருக்குத் தொடர்பு ஏற்பட வாய்ப்பு இருந்தது. பொன்பற்றியூர் என்ற பெயரை ஓரளவு ஒத்த பொன்பரிப்பு (பொன்பரிப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தளம் மாவட்டத்திலே பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்களைக்கொண்டு மிக நீண்டகாலமாகத் தமிழ்த் தொடர்புடையதாக இருந்துள்ளது. தமிழ் மொழியின் முக்கியமான வட்டார வழக்குகளைக் குறிக்கும் வீரசோழியம் இலங்கைத் தமிழ் பற்றி எதுவும் கூறாமையால், அவரை இலங்கைத் தமிழர் என்று கொள்வது சிரமமாக இருக்கிறது.

திருவாசகத்திலே இலங்கையைப் பற்றிய குறிப்புகள் எதுவும் உண்டா என்பது நியாயமான வினா. 'திருவார்த்தை' என்ற பதிகத்திலுள்ள ஐந்தாவது பாடலிலே,

'உந்து திரைக்கடலைக் கடந்தன்று ஓங்கும் மதில்
இலங்கைதனில் பந்தணைமெல்விரலாட்கருளும் பரிசு'

என்ற பகுதி காணப்படுகிறது. திருவாசக உரையாசிரியர்கள் சிவபிரான் இராவணன் மனைவியாகிய மண்டோதரிக்கு அருளியதை இப்பகுதி விளக்குவதாகக் கூறுவர். திருவாசகருக்குப் பலநூற்றாண்டுகள் பிந்தித் தோன்றிய திருஉத்தர கோசமங்கைப் புராணச் செய்தியை அடிப்படையாகக்கொண்டே இந்த விளக்கம் கொடுக்கப்படுகிறது.

'ஆர்கலி சூழ்தென் இலங்கை அழகமர் வண்டோதரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை மேயபிரான்'

என்று குயிற்பத்தின் இரண்டாவது பாடல் குறிப்பிடும் பகுதிக்கே இவ்விளக்கம் பொருத்தம் போலக் காணப்படுகிறது. திருவார்த்தைப் பகுதியின் பொருள் கருகலாகவே இருக்கிறது. 'கீர்த்தித் திருவகவல்' என்ற பதிகத்திலே, 'தேவூர்த் தென்பால் திகழ்தருதீவில் கோவார்கோலங் கொண்ட கொள்கை' என்ற குறிப்பு வருகிறது தேவூர் என்பது இராமேசுவரத்துக்கு அயலிலுள்ள ஒரு தலமெனவும் அதற்குத் தெற்கிலுள்ள தீவு என்பது இலங்கையைக் குறிக்கலாமெனவும் 'திருவாசகம் ஆராய்ச்சிக் குறிப்புகள்' (1965) என்ற நூலிலே மு. அருணசலம் கூறியுள்ளார். இக்கருத்து இன்னும் ஆராயப்படவேண்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


அருணாசலம், மு. — திருவாசகம் ஆராய்ச்சிக் குறிப்புகள், சைவசித்தாந்த மகா சமாஜ அறுபதாண்டு நிறைவு விழா மலர், சிதம்பரம். 1965.

அருளம்பலவனார், பண்டிதமணி க. யாழ்ப்பாணம், — 1. திருவாசக ஆராய்ச்சியுரை (முதலாம்பாகம்), யாழ்ப்பாணம், 1966.
2. திருவாசக ஆராய்ச்சியுரை (இரண்டாம்பாகம்), யாழ்ப்பாணம், 1973.

இராமநாதபிள்ளை, ப. — திருவாசகம் தெளிவுரை, கழக வெளியீடு, 1969.

சண்முகம். செ. வை. — மலையாள மொழியின் உருப் பேறும் வளர்ச்சியும், புலமை, தொகுதி 1. பகுதி 4, சென்னை, 1975.

சோமலெ — செட்டிநாடும் தமிழும், பாரி நிலையம் சென்னை, 1954,

துரைசாமிப்பிள்ளை, ஒளவை, சு. — சைவ இலக்கிய வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலைநகர், 1958.

பாஸ்கரத்தொண்டைமான், தொ. மு. — வேங்கடம் முதல்குமரி வரை. காவிரிக்கரையினிலே, திருநெல்வேலி. 1961 : பொருநைத்துறையிலே, திருநெல்வேலி, 1962.

வையாபுரிப்பிள்ளை, எஸ். — தமிழும் மலையாளமும், சொற்கலைவிருந்து, பாரி நிலையம் 1956.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cutler, Norman — Songs of Fxperience, The Poetics of Tamil Devotion Indiana University Press, 1987.

Indrapala, K. — Epigraphica Tamulica. Vol. I, Jaffna Archaeological Society, 1971.

Nilakanta Sastri, K. A. — A History of South India, Oxford University Press. 1955.

Schwartzberg, Joseph, E. — A Historical Atlas of South Asia, The University of Chicago Press, 1978.

Sethuraman, N. — Chola Pandyan Chola Gangan Chola Lankesvaran - Chola Keralan, Haridasabhat Shastipoorti Endowment Lecture Series - No 2, Place Names Society of India, Mysore, 1986.


Thurstan, Edgar — Castes and Tribes of South India, Vol V. & VI, Government Press, Madras, 1990.

The University of Ceylon — History of Ceylon, Peradeniya, 1960.

Veluppillai, A — Ceylon Tamil Inscriptions. Part I 1971: Part II, 1972; Peradeniya


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கலாநிதி ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம்**
**நினைவுப் பேருரை 1**

*நவம்பர் : 1989*

*இவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்[டுமைய நிறுவனம்].*
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org